# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2412/ 26 - 2024 නොවැම්බර් මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.11.28

2412/26 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) : மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2008.08.08 ஆம் திகதியிடப்பட்டதும் 1561/27 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட வடமேல் மாகாண மாகாண சபையின் 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்ட நியதிச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டதும் 2009.05.14 ஆம் திகதியிடப்பட்டதும் 1601/24 ஆம் இலக்கத்தைக் கொண்டதும் 2010.03.05 ஆம் திகதியிடப்பட்டதும் 1643/43 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதிவிசேட வர்த்தமானிகளின் மூலம் வெளியிடப்பட்ட வடமேல் மாகாண மாகாண சபையின் 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்ட கட்டளைகளிலுள்ள பின்வரும் கட்டளைகளைத் திருத்தி, வடமேல் மாகாண மாகாண சபையின் 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்ட நியதிச்சட்டத்தின் 24 ஆம் பிரிவு மற்றும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டம் என்பவற்றின் பிரகாரம் வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ வர்ணசூரிய ஆகிய நான் எனக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2024, நவெம்பர் மாதம் 09 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்படுகின்றதென இத்தால் அறிவிக்கின்றேன்.

திஸ்ஸ வர்ணசூரிய,<br>
ஆளுநர்,<br>
வடமேல் மாகாணம்.

குருநாகல்,<br>
2024, நவெம்பர் 09 ஆம் திகதி.


PG6922 – 06 (2024/11)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

01. வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக வடமேல் மாகாணம் சார்பில் இந்த கட்டளைகள் அமுலுக்கு வரும். கட்டளைகள் நடை முறைக்கு வரும் திகதி.

02. கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டத்தின் கட்டளைகளின் 03 ஆம் பிரிவின் IV உப பிரிவிற்கு உடனடுத்து பின்வரும் உப பிரிவுகளை சேர்ப்பதன் மூலம் 03 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது. கட்டளையின் 03 ஆம் பிரிவைத் திருத்துதல்.

03.V(அ) 03.I(இ), 03.II மற்றும் 03.III ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிகளைக் கடந்து விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டவிடத்து 05.I ஆம் ஒழுங்கு விதியில் குறிப்பிடப்பட்டுள்ள நூற்றுவீதத்திற்கு அமைவாக அங்கத்தவரினாலும் சங்கத்தினாலும் நிலுவை அங்கத்துவத் தொகைகளை செலுத்தவேண்டும் என்பததோடு அதற்கு மேலதிகமாக அங்கத்தவரினாலும் சங்கத்தினாலும் செலுத்தப்படவேண்டிய நிலுவை அங்கத்துவத் தொகையிலிருந்து பின்வருமாறு மேல் விதிப்புத் தொகையானது செலுத்துதல் வேண்டும். ஏதேனும் விதத்தில் அங்கத்தவரிடமிருந்து அங்கத்துவத் தொகையை அறவிட்டு சங்கமானது பணிப்பாளருக்கு செலுத்தாமையினால் மேல் விதிப்புத் தொகையினை செலுத்த நேரிட்டால் அங்கத்தவரினாலும் சங்கத்தினாலும் செலுத்தவேண்டிய மேல் விதிப்புத் தொகையினை சங்கமே முழுமையாக செலுத்துதல் வேண்டும்.

உரிய காலப்பகுதியை கடந்த திகதியிலிருந்து -
காலதாமதம் நாள் 01 தொடக்கம் 30 வரை - 5%
காலதாமதம் நாள் 31 தொடக்கம் 45 வரை - 15%
காலதாமதம் நாள் 46 தொடக்கம் 60 வரை - 30%
காலதாமதம் நாள் 61 தொடக்கம் 90 வரை - 60%
காலதாமதம் 90 நாட்களுக்கு மேலாயின் - 100%

(ஆ) இந்த திருத்தப்பட்ட கட்டளைகள் நடைமுறைக்குவரும் திகதியன்றுக்கு முன்னர் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் மீது சங்கத்தில் நிரந்தர சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள ஆயினும் அங்கத்துவத் தொகை பெற்றுக்கொள்ளப்படாத ஊழியர்களின் விண்ணப்பங்கள் திருத்தப்பட்ட கட்டளைகள் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்பதோடு, 05.I ஆம் கட்டளையின் பிரகாரம் நிலுவைத் தொகையினை அங்கத்தவரினாலும் சங்கத்தினாலும் பணிப்பாளருக்குச் செலுத்துதல் வேண்டும். ஆயினும், எவரேனும் விண்ணப்பதாரரொருவர் இந்த திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் திகதியிலிருந்து 60 வயதினை பூர்த்திசெய்யும் திகதியன்றுக்கு 60 மாத சேவைக்காலத்தை பூர்த்திசெய்யவில்லையாயின் அவர் இந்த திருத்தப்பட்ட கட்டளை நடைமுறைக்குவரும் மாதத்திற்கான திரட்டிய சம்பளத்தினை அடிப்படையாகக்கொண்டு 05.I ஆம் கட்டளையில் குறிப்பிடப் பட்டுள்ள நூற்றுவீதத்திற்கு அமைவாக 60 தவணை அங்கத்துவத் தொகையானது சேர்க்கப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் பணிப்பாளருக்குச் செலுத்துதல் வேண்டும். ஓய்வூதிய உரிமை கிடைக்கப்பெறுவது 60 தவணைகளுக்கான அங்கத்துவத் தொகை செலுத்தி முற்றாக்கப்பட்ட திகதி அல்லது 60 வயதினை பூர்த்திசெய்யும் திகதி என்னும் இரண்டில் பின்னர் வரும் திகதி உரியதாகும் மாதத்திற்கு உடனடுத்து வருகின்ற மாதத்திலிருந்தாகும்.

(இ) மேல் 03.(V)(ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்கள் மேல் விதிப்புத் தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவதோடு, அவர்கள் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும் திகதியிலிருந்தாகும்.

03. கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கட்டளையின் 4.I ஆம் பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவை பதிலீடு செய்தும் 4.III(உ) ஆம் பிரிவை நீக்கியும் 04 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது.

கட்டளையின் 04 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4.I அங்கத்துவத் தொகையினை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவம் கிடைக்கப்பெற்றவிடத்து விண்ணப்பதாரரின் தகைமைகள் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரானவர் உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர், விண்ணப்பம் கிடைக்கப்பெற்று 60 நாட்களுக்குள் அவருடைய சிபாரிசுகளுடன் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டத்தின் கட்டளையின் 5.I ஆம் 5.II ஆம் பிரிவுகளை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவுகளை பதிலீடு செய்தும் 5.V ஆம் பிரிவை உள்ளடக்கியும் 05 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது.

கட்டளையின் 05 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5.II ஆம் பிரிவின் பக்க குறிப்பானது 'பதிவுக் கட்டணம்' எனவும் இத்தால் திருத்தப்படுகின்றது.

5.I(அ) இந்த கட்டளை நடைமுறைக்குவரும் திகதியன்றில் இந்த திட்டத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுள்ள அத்துடன் இந்த கட்டளைகள் நடைமுறைக்கு வரும் திகதியின் பின்னர் திட்டத்தில் இணைந்துக்கொள்ளும் அங்கத்தவரின் மாதாந்த திரட்டிய சம்பளத்திலிருந்து 6 சதவீதத்தை அறிவிட்டு பணி கொள்ளும் சங்கத்தினால் மாதாந்த அங்கத்துவத் தொகையை பணிப்பாளருக்கு செலுத்த வேண்டுமென்பதோடு, இந்த அங்கத்துவத் தொகையினை தமது மாதாந்த திரட்டிய சம்பளத்திலிருந்து அறவிட்டு பணிப்பாளருக்கு அனுப்புவதற்கு பணி கொள்ளும் சங்கத்திற்கு எழுத்துமூல அதிகாரத்தினை கையளித்தல் வேண்டும்.

'திரட்டிய சம்பளம்' என்னும் போது ஊழியர் ஈட்டிய சம்பளவேற்றம் உள்ளடக்கப்பட்ட குறித்த மாதத்திற்குரிய அடிப்படைச் சம்பளம் என பொருள்படும். வேறு கொடுப்பனவுகள் எதனையும் இதற்காக ஏற்புடையதாக்கிக் கொள்தலாகாது.

5.I(ஆ) அதேபோன்று மாதாந்தம் ஒவ்வொரு அங்கத்தவர் சார்பிலும் அங்கத்தவர்களின் மாதாந்த திரட்டிய சம்பளத்தின் 3 சதவீதம் கொண்ட அங்கத்துவத் தொகையினை பணி கொள்ளும் சங்கத்தினால் பணிப்பாளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

5.II திட்டத்தில் இணைந்துக் கொள்ளும் ஒவ்வொரு அங்கத்தவர் சார்பிலும் ஏழாயிரத்து ஐநூறு ரூபா (7,500/-) பதிவு கட்டணமாக செலுத்த வேண்டும் என்பதோடு, அதிலிருந்து பணி கொள்ளும் சங்கம் அல்லது இணைந்த சங்கம் ஆறாயிரம் (6,000/-) ரூபாவும் அங்கத்தவர் ஆயிரத்து ஐநூறு (1,500/-) ரூபாவும் அங்கத்த வரானவர் திட்டத்தில் இணைந்துக் கொள்ளும் திகதி தொடக்கம் பணிப்பாளரினால் விதித்துரைக்கப்படும் காலப்பகுதிக்குள் ஒரே தடவையில் அல்லது தவணைகளில் பணிப்பாளருக்குச் செலுத்துதல் வேண்டும். ஆயினும் பணிப்பளாரினால் விதித் துரைக்கப்படும் காலப்பகுதி ஒரு வருடத்தினை விஞ்சுதலாகாது. மேலே குறிப் பிடப்பட்டுள்ளவாறு அங்கத்தவரிடமிருந்து அறவிட வேண்டிய தொகையினை அங்கத்தவரிடமிருந்து அறவிட்டு பணி கொள்ளும் சங்கத்தினால் திட்டத்திற்கு செலுத்தல் வேண்டும்.

5.V திட்டத்தில் இணைந்துக் கொண்டுள்ள எவரேனும் அங்கத்தவர் ஒருவர் ஓய்வுபெறும் திகதியன்றுக்கு குறித்த அங்கத்தவர் சார்பில் திட்டத்திற்கு செலுத்தவேண்டிய மொத்த அங்கத்துவத் தொகைக்கான பெறுமதியானது செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் இந்த நிலுவை அங்கத்துவத் தொகைக்கான பெறுமதியானது பின்வருமாறு அறவிட்டுக்கொள்வதற்கு பணிப்பாளரானவர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அங்கத்தவர் ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் உரித்துடையதாகும் திரட்டிய சம்பளத்தை அடிப்படையாகக்கொண்டு, செய்யப்படும் கணக்கிடலின் மீது அங்கத்தவரிட மிருந்து அறவிடப்படவேண்டிய நிலுவை அங்கத்துவத் தொகை இருக்குமாயின் அங்கத்தவரிடமிருந்தும் பணி கொள்ளும் சங்கத்திடமிருந்தும் / இணைந்த சங்கத்திடமிருந்தும் குறித்த தொகையினை அறவிட்டுக்கொள்வதற்கு பணிப்பாளரானவர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

05. கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டத்தின் கட்டளைகளின் 6.I (ஆ) மற்றும் 6.II (இ) ஆம் பிரிவுகளை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவுகளை பதிலீடு செய்தும் 6.II(ஈ) என்னும் புதிய பிரிவொன்றை சேர்ப்பதன் மூலமும் 06 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது. கட்டளையின் 06 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6.I(ஆ) ஆயினும் இந்த திருத்த கட்டளைகள் நடைமுறைக்குவரும் திகதியன்றில் ஏதேனும் காரணத்தினால் 60 வயதாகும் போது ஆகக்குறைந்த அங்கத்துவத் தொகையான 60 மாதாந்த தவணைத் தொகையினைச் செலுத்திமுடிப்பதற்கு எவரேனும் அங்கத்தவர் ஒருவருக்கு இயலாத சந்தர்ப்பத்தில் ஓய்வு பெற்றதன் பின்னர், ஒரு வருடமென்னும் உச்ச காலப்பகுதிக்குள் குறித்த அங்கத்துவத் தொகையினைச் செலுத்தி முடிப்பதற்கு குறித்த அங்கத்தவருக்கு உரித்து கிடைக்கப்பெறும்.

6.II(இ) இந்த திட்டத்தில் இணைந்து கொள்ளும் சந்தர்ப்பத்தில் அடுத்துவரும் பிறந்த நாள் 55 வயதைவிட குறைவாக இருக்கும் ஒருவர் சம்பந்தமாக இந்த கட்டளைகளின் அட்டவணை (அ) வின் நிரல் இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகக் குறைந்த மாதாந்த அங்கத்துவத் தொகையினை செலுத்தவேண்டும் என்பதோடு குறித்த அட்டவணையின் III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் கிடைக்கப்பெறுவதற்கு உரித்து உள்ளது.

5.II(ஈ) இந்த திட்டத்தில் இணைந்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அடுத்துவரும் பிறந்த நாள் 55 வயதைவிட மேலாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அட்டவணை (அ) வின் பகுதி இலக்கம் 02 இல் IIIஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் கிடைக்கப் பெறுவதற்கு உரித்து உள்ளது.

06. கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டத்தின் கட்டளைகளின் 7.I மற்றும் 7.II ஆம் பிரிவுகளை நீக்கி அதற்குப் பதிலாக 7.I ஆக பின்வரும் பிரிவு பதிலீடு செய்யப்படுகின்றது. அதேபோன்று 7.III, 7.IV, 7.V, 7.VI மற்றும் 7.VIII ஆகிய பிரிவுகள் 7.II, 7.III, 7.IV, 7.V, 7.VI என மீண்டும் இலக்கமிடுவதன் மூலம் திருத்தப்படுகின்றது.

கட்டளையின் 07 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7.I 55 வயதிற்கு குறைந்த அங்கத்தவர் ஒருவர் ஓய்வூதிய உரிமையினை பெற முடியுமாவது மருத்துவ காரணங்களின் மீது ஓய்வுபெற்றால் மாத்திரமாகும். இதன் பொருட்டு 1995 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க வடமேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூட்டிணைக்கப்பட்ட மருத்துவச பையொன்றினால் செய்யப்படும் சிபாரிசின் மீது மாத்திரம் ஓய்வுபெற செய்வித்திருத்தல் வேண்டுமென்பதோடு ஓய்வூதிய உரிமையினை பெறுவதற்கு அங்கத்துவம் பெறப்பட்டு 120 மாதங்கள் கடந்திருத்தல் வேண்டும்.

07. கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டத்தின் கட்டளைகளில் "சேவையிலிருந்து கேட்டு விலகும் சந்தர்ப்பத்தில் செலுத்தப்படும் நலன்கள்" என்னும் பக்கக்குறிப்பின் கீழான 8 ஆம் பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக 8.I ஆக பின்வரும் பிரிவையும் "சம்பளமற்ற லீவு பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில்" என்னும் பக்கக்குறிப்பின் கீழ் 8.I, 8.II ஆகிய பிரிகளை மீண்டும் 8.II, 8.III என இலக்கமிடுவதன் மூலமும் 8.III ஆம் பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக 8.IV ஆக பின்வரும் பிரிவை பதிலீடு செய்வதன் மூலமும் 8 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது.

கட்டளையின் 08 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8.I அங்கத்தவர் ஒருவர் ஓய்வூதிய உரிமையினைப் பெறுவதற்கு முன்னர் கூட்டுறவுத்துறை சேவையிலிருந்து கேட்டு விலகினால், அவர் திட்டத்திலிருந்தும் விலகியவராக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒருவர் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் செய்யப்படுகின்ற கோரிக்கையின் மீது பணிப்பாளரால் ஆலோசனைக் குழுவின் உடன்பாட்டின் மீது தீர்மானிக்கப்படுகின்ற அங்கத்தவரின் தேறிய அங்கத்துவத் தொகையையும் அதற்குரிய வட்டித் தொகையையும் ஒரே தடவையில் செலுத்தப்படும் முழுமை கொடுப்பனவொன்றாக பெறுவதற்கு குறித்த அங்கத்தவருக்கு உரித்து கிடைக்கப்பெறும். ஆயினும், சேவைக்காலமானது 02 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் சேவையிலிருந்து கேட்டு விலகினால் முழுமைத் தொகையினை பெறுவதற்கு உரித்து கிடைக்கமாட்டாது. இவ்வாறு கேட்டு விலகிய திகதியிலிருந்து 06 மாத காலத்திற்குள் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கமொன்றின் ஊழியர் ஒருவராக கூட்டுறவு ஆணைக்குழுவினால் நிரந்தர நியமனம் பெற்றிருந்தால் மேற்குறிப்பிட்ட காலத்தினை கருத்திற் கொள்ளாது அங்கத்தவரின் தேறிய அங்கத்துவத் தொகையையும் அதற்குரிய வட்டித் தொகையையும் ஒரே தடவையில் செலுத்தப்படும் முழுமை கொடுப்பனவொன்றாக பெறுவதற்கு குறித்த அங்கத்தவருக்கு உரித்து கிடைக்கப்பெறும்.

8.IV எவரேனும் அங்கத்தவர் ஒருவர் முறையாக 30 நாட்கள் அல்லது அதற்கு கூடுதலான காலப்பகுதி ஒன்றுக்கு சம்பளமற்ற லீவு பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் சேவைக்கு அழைக்காமல் அல்லது சேவைக்கு அழைக்கப்படாத சந்தர்ப்பத்தில் குறித்த சம்பளமற்ற சேவைக்காலம் ஓய்வூதியம் கணக்கிடுவதற்காக கணக்கிலெடுத்தலாகாது என்பதுடன், இந்தக் காலப்பகுதியின் சார்பில் அங்கத்துவத் தொகையினையும் அறவிடாதிருத்தல் வேண்டும்.

08 கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டத்தின் கட்டளைகளில் 11.I(இ) ஆம் பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவை பதிலீடு செய்வதன் மூலம் 11 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது. கட்டளையின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11.I(இ) அங்கத்தவரின் விதவை மனைவி / தபுதாரர் உயிருடன் இல்லாதவிடத்து மொத்த மரண பணிக்கொடை தொகையானது தொழிலற்ற திருமணமாகாத பிள்ளைகளுக் கிடையே சமமாக பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

"தொழிலற்ற" என்னும் போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்கள் அல்லது நியதிச்சட்ட சபைகள் அல்லது மத்திய அரசாங்கத்தின் / மாகாண சபையின் கூட்டுறவுத்துறை ஊழியர் ஆணைக்குழுவின் மூலம் நிரந்தர நியமனமொன்றினைப் பெற்று கூட்டுறவு சேவையில் ஈடுபடுபவர்கள் உள்ளடக்கப்படமாட்டார்கள்.

09. கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டத்தின் கட்டளைகளில் 12 ஆம் பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவை பதிலீடு செய்வதன் மூலம் 12 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது. கட்டளையின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. அங்கத்தவரின் அடுத்தமைவோர் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மரணப் பணிக்கொடையினை பெற உரித்து கிடைக்கப் பெறுகையில் அவர்களுக்கு உரித்து கிடைப்பதற்கு ஏதுவாய் அமைந்த சந்தர்ப்பம் பற்றி குறித்த அங்கத்தவரின் அடுத்தமைவோர் மரணம் நிகழ்ந்து 180 நாட்களுக்குள் உரித்தினை உறுதிசெய்யும் ஆவணங்களுடன் பணிப்பாளருக்கு கோரிக்கையொன்றினை முன்வைத்தல் வேண்டும்.

10. கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டத்தின் கட்டளைகளில் 15.I ஆம் பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவை பதிலீடு செய்வதன் மூலம் 15 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது. கட்டளையின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15.I எவரேனும் அங்கத்தவர் ஒருவர் கூட்டுறவுச் சேவையிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது சேவை முடிவுக்கு கொண்டுவரப்பட்டால் அல்லது கட்டாய ஓய்வுபெறச் செய்விக்கப்பட்டால் அல்லது பதவி வெறிதாக்கிய ஒருவராக கருதப்பட்டால் பதவி இல்லாமற் போகும் சந்தர்ப்பத்தில் அவர் இந்த திட்டத்திலிருந்து விலகிய ஒருவராக கருதப்படுதல் வேண்டும் என்பதோடு, அத்தகைய ஒருவர் பணிப்பாளருக்கு எழுத்துமூலம் செய்கின்ற கோரிக்கையின் பேரில் பணிப்பாளர் ஆலோசனைக் குழுவின் உடன்பாட்டின் மீது தீர்மானிக்கின்ற அங்கத்தவரது தேறிய அங்கத்துவத்

தொகையை மாத்திரம் பெற்றுக் கொள்வதற்கு குறித்த அங்கத்தவருக்கு உரித்து கிடைக்கப்பெறும். ஆயினும், சேவைக்காலமானது 02 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் சேவையிலிருந்து கேட்டு விலகினால் முழுமைத் தொகையினை பெறுவதற்கு உரித்து கிடைக்கமாட்டாது.

11. கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டத்தின் கட்டளைகளில் 18.I ஆம் பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவை பதிலீடு செய்வதன் மூலம் 18 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது. கட்டளையின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

18.I 55 வயது பூர்த்தியடைந்ததன் பின்னர், எவரேனும் அங்கத்தவர் ஒருவர் 60 வயதினையடைவதற்கு முன்னர் முறையாக சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்ற சந்தர்ப்பத்தில் அவர் ஓய்வுபெறுகின்ற போது செலுத்தியுள்ள அங்கத்துவத் தொகைக்கான தவணைகளின் எண்ணிக்கை மற்றும் ஓய்வுபெறும் மாதத்திற்குரிய இணைந்த சம்பளம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, இந்த கட்டளையின் அட்டவணை அ வில் தொகுதி 01 இன் III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வூதியத்தினைப் பெறுவதற்கு 60 வயது பூர்த்தியடைந்த மாதத்திற்கு பின்னர் வரும் மாதத்திலிருந்து உரித்து கிடைக்கப்பெறும்.

12. கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டத்தின் கட்டளைகளில் 21 ஆம் பிரிவின் பக்கக்குறிப்பு "ஓய்வூதியம் செலுத்துதல்" எனவும் தற்போதுள்ள 21 ஆம் பிரிவை 21.IV என திருத்தி பின்வரும் பிரிவுகளை 21.I, 21.II மற்றும் 21.III என சேர்த்து 21 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது. கட்டளையின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

21.I ஓய்வூதிய நிதியத்தில் அங்கத்துவத்தை பெற்றிருந்து உரிய முறையில் ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்வதற்கு பணிப்பாளரினால் விதித்துரைக்கப்பட்டுள்ள ஆவணங்களை அங்கத்தவர் ஓய்வுபெற்ற திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் சமர்ப்பித்தல் வேண்டும். இதன்போது உரிய ஆவணங்களுடன் ஓய்வூதிய உரித்துக்கான கோரிக்கை விண்ணப்பப் படிவத்தையும் தொடர்பு படுத்துவது பணிக்கொள்ளும் சங்கத்தினதும் / இணைந்த சங்கத்தினதும் பொறுப்பாகும். உரிய கோரிக்கையினை முன்வைப்பது ஓய்வுபெறும் திகதியிலிந்து 90 நாட்களை கடந்து தாமதமாகும் சந்தர்ப்பத்தில் ஓய்வூதியம் பெறுவதற்கு உரித்துடைய இணைந்த சம்பளத்தினை அடிப்டையாகக் கொண்டு 03.V.(ஆ) விற்கு அமைவாக மேல் விதிப்புக்கு பணிகொள்ளும் சங்கம் / இணைந்த சங்கம் ஆட்படும்.

21.II ஓய்வூதியம் கணக்கிடும் போது பிழையாக கணக்கிடுவதனால் எழும் செம்மையற்ற தன்மை, அங்கத்தவர் ஓய்வுபெறும் திகதிக்குரியதாக நிகழும் பணிக்கொள்ளும் சங்கத்தின் / இணைந்த சங்கத்தின் சம்பளம் செலுத்தும் நிலைமையில் ஏற்படும் மாற்றம், அங்கத்தவரின் சேவை நிலைமையிலான மாற்றம் அல்லது ஆவணங்களை சமர்ப்பிக்கும் பிழை என்பன பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் ஓய்வூதியதாரருக்கு அவருடைய சம்பளத்தை திருத்துவதற்கு உரித்துள்ளது. அத்தகைய கோரிக்கை யொன்று இறுதியாக சேவையாற்றிய சங்கத்தின் / இணைந்த சங்கத்தின் ஊடாக தொடர்புபடுத்துதல் வேண்டும். குறித்த கோரிக்கைக்கு அமைவாக ஓய்வூதியத்தை

திருத்தும் சாத்தியமும் அதற்கிணங்க, செலுத்தவேண்டிய தொகை ஏதும் இருப்பின் ஓய்வூதியகாரருக்கு செலுத்தும் அதிகாரமும் ஓய்வூதிய நிதியத்தினால் மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை ஏதுமிருப்பின் அதனை அறவிடும் அதிகாரமும் பணிப்பாளருக்குரியதாகும்.

21.III ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருக்கும் அங்கத்தவர் ஒருவர் மரணிக்கும் சந்தர்ப்பத்தில் உறுதிப்படுத்தல் ஆவணங்களுடன் பணிப்பாளருக்கு அறியச் செய்விக்கும் பொறுப்பு உரிய ஓய்வூதியம் செலுத்தும் கிராமிய வங்கி / வங்கி உரியதாகும் சங்கம் / இணைந்த சங்கத்தினால் வகித்தல் வேண்டும்.

13. கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டத்தின் கட்டளைகளில் 22 ஆம் பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவை பதிலீடு செய்து 22 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது. கட்டளையின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

22 இந்த கட்டளைகளின் கீழ் முழுமை கொடுப்பனவு அல்லது தேறிய அங்கத்துவத் தொகை ஒரே தடவையில் செலுத்தப்படுகின்ற தொகையொன்றாக பெறுவதற்கு உரித்து கிடைக்கப்பெறுகின்ற எவரேனும் அங்கத்தவர் ஒருவரினால் தமது பணிக்கொள்ளும் சங்கத்துடன் அல்லது இணைந்த சங்கத்துடன் சட்டபூர்வமான உடன்படிக்கையின் மீது உடன்பட்ட ஏதேனும் தொகையொன்றை சங்கத்திற்கு அல்லது இணைந்த சங்கத்திற்கு செலுத்தவுள்ள சந்தர்ப்பத்தில் அங்கத்தவரினால் பணிப்பாளருக்கு செய்யப்படுகின்ற கோரிக்கையினை பரிசீலனை செய்ததன் பின்னர் அவ்வாறு உடன்பாட்டிற்கு வந்த மொத்த தொகையை அல்லது அதன் ஒரு பகுதியை செலுத்துவதற்கு அங்கத்தவரின் முழுத் தொகையை / தேறிய அங்கத்துவத் தொகையை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ பணி கொள்ளும் சங்கத்திற்கு அல்லது இணைந்த சங்கத்திற்கு ஆலோசனை குழுவின் உடன்பாட்டின் மீது செலுத்தலாம்.

14. கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டத்தின் கட்டளைகளில் 25 ஆம் பிரிவை 25.I என மீள இலக்கமிட்டும் உடனடுத்து 25.II என பின்வரும் பிரிவை உள்ளடக்கி 25 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது. கட்டளையின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.

25.II எவரேனும் ஊழியர் ஒருவர் ஏதேனும் விதத்தில் சேவையிலிருந்து விலகி மீண்டும் அதே சங்கத்தில் / இணைந்த சங்கத்தில் அல்லது வேறு சங்கத்தில் / இணைந்த சங்கத்தில் ஏதேனும் பதவியொன்றில் நிரந்தர நியமனம் பெற்ற சந்தர்ப்பத்தில் குறித்த நியமனத்தைப் பெற்ற திகதி முதல் புதிய அங்கத்தவராக திட்டத்திற்கு பங்களிப்பு செலுத்துதல் வேண்டும்.

15. இந்த கட்டளையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும். உரைகளுக்கிடயே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**அட்டவணை 'அ'**

வடமேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டம்

நிரல் இலக்கம் 01:

18 - 55 வயதுக்கு இடைப்பட்ட வயதொன்றில் திட்டத்தில் இணைந்துகொள்ளும் ஊழியர்கள் செலுத்தவேண்டிய தவணைத் தொகையும் உரித்துடையதாகும் ஓய்வூதிய நூற்றுவீதமும்

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *செலுத்தப்படவேண்டிய மாதாந்த பங்களிப்பு தவணைத் தொகை சார்பில் மாதாந்த திரட்டிய சம்பளத்திலிருந்தான நூற்று வீதம்* | *பங்களிப்பு நல்கிய திகதியிலிருந்து ஓய்வு பெறும் திகதியன்றுக்கு செலுத்தியுள்ள தவணைகளின் எண்ணிக்கை* | *60 வயதினை பூர்த்தியடைந்து அடுத்துவரும் முதல் மாதத்திலிருந்து வாழ்நாள் முழுவதும் உரித்துடையதாகும் ஓய்வூதியம், ஓய்வு பெறும் மாதத்தில் உரியதாகும் திரட்டிய சம்பளத்திலிருந்தான நூற்று வீதம்* |
| 6 | 504 | 80 |
| 6 | 492 - 503 | 79 |
| 6 | 480 - 491 | 78 |
| 6 | 468 - 479 | 77 |
| 6 | 456 - 467 | 76 |
| 6 | 444 - 455 | 75 |
| 6 | 432 - 443 | 74 |
| 6 | 420 - 431 | 73 |
| 6 | 408 - 419 | 72 |
| 6 | 396 - 407 | 71 |
| 6 | 384 - 395 | 70 |
| 6 | 372 - 383 | 69 |
| 6 | 360 - 371 | 68 |
| 6 | 348 - 359 | 67 |
| 6 | 336 - 347 | 66 |
| 6 | 324 - 335 | 65 |
| 6 | 312 - 323 | 64 |
| 6 | 300 -311 | 63 |
| 6 | 288 - 299 | 62 |
| 6 | 276 - 287 | 61 |
| 6 | 264 - 275 | 60 |

**அட்டவணை 'அ'** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *செலுத்தப்படவேண்டிய மாதாந்த பங்களிப்பு தவணைத் தொகை சார்பில் மாதாந்த திரட்டிய சம்பளத்திலிருந்தான நூற்றுவீதம்* | *பங்களிப்பு நல்கிய திகதியிலிருந்து ஓய்வு பெறும் திகதியன்றுக்கு செலுத்தியுள்ள தவணைகளின் எண்ணிக்கை* | *60 வயதினை பூர்த்தியடைந்து அடுத்துவரும் முதல் மாதத்திலிருந்து வாழ்நாள் முழுவதும் உரித்துடையதாகும் ஓய்வூதியம், ஓய்வு பெறும் மாதத்தில் உரியதாகும் திரட்டிய சம்பளத்திலிருந்தான நூற்றுவீதம்* |
| 6 | 252 - 263 | 59 |
| 6 | 240 - 251 | 58 |
| 6 | 228 - 239 | 57 |
| 6 | 216 - 227 | 56 |
| 6 | 204 - 215 | 55 |
| 6 | 192 - 203 | 54 |
| 6 | 180 - 191 | 53 |
| 6 | 168 - 179 | 52 |
| 6 | 156 - 167 | 51 |
| 6 | 144 - 155 | 50 |
| 6 | 132 - 143 | 49 |
| 6 | 120 - 131 | 48 |
| 6 | 108 - 119 | 47 |
| 6 | 96 - 107 | 46 |
| 6 | 84 - 95 | 45 |
| 6 | 72 - 83 | 44 |
| 6 | 60 - 71 | 40 |

**நிரல் இலக்கம் 02:**

55 - 60 வயதுக்கு இடைப்பட்ட வயதொன்றில் திட்டத்தில் இணைந்துகொள்ளும் ஊழியர்கள்
செலுத்தவேண்டிய தவணைத் தொகையும் உரித்துடையதாகும் ஓய்வூதிய நூற்றுவீதமும்

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* | *நிரல் IV* |
|---|---|---|---|
| *செலுத்தப்படவேண்டிய மாதாந்த பங்களிப்பு தவணைத் தொகை சார்பில் மாதாந்த திரட்டிய சம்பளத்திலிருந்தான நூற்றுவீதம்* | *செலுத்தவேண்டிய ஆகக்குறைந்த தவணைகளின் எண்ணிக்கை* | *60 வயதினை பூர்த்தியடைந்து அடுத்துவரும் முதல் மாதத்திலிருந்து வாழ்நாள் முழுவதும் உரித்துடையதாகும் ஓய்வூதியம், ஓய்வு பெறும் மாதத்தில் உரியதாகும் திரட்டிய சம்பளத்திலிருந்தான நூற்றுவீதம்* | *ஓய்வூதியம் உரித்துடையதாகும் சந்தர்ப்பம்* |
| 6 | 60 | 40 | 60 வயதினை பூர்த்திசெய்யும் திகதி அல்லது ஆகக்குறைந்த பங்களிப்பு தொகையான 60 தவணைகளை செலுத்தி முடித்த திகதி என்னும் இரண்டில் பின்னர் வரும் மாதம் தொடக்கம் |

**அட்டவணை 'ஆ'**

மரணத்தின் போது செலுத்தப்படும் மரண பணிக்கொடை

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *திட்டத்தில் இணைந்துகொண்ட திகதியிலிருந்து சேவைக்காலம் (மாதங்களில்)* | *உரித்துடையதாகும் மரண பணிக்கொடை (ரூபா)* |
| 0 - 60 | 10,000.00 |
| 61 - 72 | 11,000.00 |
| 73 - 84 | 12,000.00 |
| 85 - 96 | 13,000.00 |
| 97 - 108 | 14,000.00 |
| 109 - 120 | 15,000.00 |
| 121 - 132 | 16,000.00 |

**அட்டவணை 'ஆ'**

மரணத்தின் போது செலுத்தப்படும் மரண பணிக்கொடை

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *திட்டத்தில் இணைந்துகொண்ட திகதியிலிருந்து சேவைக்காலம் (மாதங்களில்)* | *உரித்துடையதாகும் மரண பணிக்கொடை (ரூபா)* |
| 109 - 120 | 15,000.00 |
| 121 - 132 | 16,000.00 |
| 133 - 144 | 17,000.00 |
| 145 - 156 | 18,000.00 |
| 157 - 168 | 19,000.00 |
| 169 - 180 | 20,000.00 |
| 181 - 192 | 21,000.00 |
| 193 - 204 | 22,000.00 |
| 205 - 216 | 23,000.00 |
| 217 - 228 | 24,000.00 |
| 229 - 240 | 25,000.00 |
| 241 - 252 | 26,000.00 |
| 253 - 264 | 27,000.00 |
| 265 - 276 | 28,000.00 |
| 277 - 288 | 29,000.00 |
| 289 - 300 | 30,000.00 |
| 301 - 312 | 31,000.00 |
| 313 - 324 | 32,000.00 |
| 325 - 336 | 33,000.00 |
| 337 - 348 | 34,000.00 |
| 349 - 360 | 35,000.00 |
| 361 - 372 | 36,000.00 |
| 373 - 384 | 37,000.00 |
| 385 - 396 | 38,000.00 |
| 397 - 408 | 39,000.00 |
| 409 மற்றும் 409 விட அதிகம் | 40,000.00 |

EOG 11 - 0180

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.